# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.44/2020

வாதி தரப்பு 3 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---------------------------------------------------------------

பெயர் ராமச்சந்திரன் வா.சா.–3

த/பெ. கருப்பணத்தேவர்

கிராமம் தொழில் கிராம நிர்வாக அலுவலர்

தாலுகா அருப்புக்கோட்டை வயது

---------------------------------------------------------------

முதல் விசாரணை 12–12–2025.

நான் மண்டபசாலை கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதன்பேரில் சாட்சியமளிக்க இன்று ஆஜராகியுள்ளேன். சாட்சிய அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன்.

1) நீதிமன்ற அழைப்பாணை நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2) எனது அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

3) சர்வே எண்.326 ன் புலவரைபடம் உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) சர்வே எண்.326ன் "அ" பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) சர்வே எண்.331ன் புலவரைபடம் உண்மை நகல் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) சர்வே எண்.331ன் "அ" பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) சர்வே எண்.332ன் புலவரைபடம் உண்மை நகல் சா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) சர்வே எண்.332ன் "அ" பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 2020ம் வருடத்திற்குரிய சர்வே எண்.326,331,332 ஆகியவற்றிற்கான சாகுபடி அடங்கல் கணக்கு உண்மை நகல் சா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 2021ம் வருடத்திற்குரிய சர்வே எண்.326,331,332 ஆகியவற்றிற்கான சாகுபடி அடங்கல் கணக்கு உண்மை நகல் சா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 2022ம் வருடத்திற்குரிய சர்வே எண்.326,331,332 ஆகியவற்றிற்கான சாகுபடி அடங்கல் கணக்கு உண்மை நகல் சா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 2023ம் வருடத்திற்குரிய சர்வே எண்.326,331,332 ஆகியவற்றிற்கான சாகுபடி அடங்கல் கணக்கு உண்மை நகல் சா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) 2024ம் வருடத்திற்குரிய சர்வே எண்.326,331,332 ஆகியவற்றிற்கான சாகுபடி அடங்கல் கணக்கு உண்மை நகல் சா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) 2025ம் வருடத்திற்குரிய சர்வே எண்.326,331,332 ஆகியவற்றிற்கான சாகுபடி அடங்கல் கணக்கு உண்மை நகல் சா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15) சர்வே எண்.326,331,332 ஆகியவற்றிற்கான சிட்டா உண்மை நகல் சா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

(1) மண்டபசாலை கிராம நிர்வாகத்தில் உட்படும் கிராமங்கள் எம்.ரெட்டியபட்டி, எம்.லட்சுமிபுரம், எம்.ஆர்.புதூர், மண்டபசாலை ஆகியவை. மேற்படி மூன்று சர்வே எண்களும் மண்டபசாலை கிராம நிர்வாகத்திற்கு உட்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.331ன் புலவரைபடத்தில் பச்சை மையினால் காட்டப்பட்டுள்ளது சர்வே வண்டிப்பாதை. மேற்படி வண்டிப்பாதை சர்வே எண்.331ல் நடுமையத்தில் செல்கிறது என்றால் சரிதான். மேற்படி வண்டிப்பாதை எம்.ரெட்டியபட்டி கிராமத்திலிருந்து மீனாட்சிபுரம் கிராமம் செல்லக்கூடிய பாதை என புலவரைபடத்தில் காட்டப்பட்டு உள்ளது. சர்வே எண்.331,332,326ல் மானாவரி புஞ்சை கரிசல் நிலங்கள் என்றால் சரிதான். மானாவரி புஞ்சையில் மழைபெய்தால் தான் விவசாயம் நடக்கும் என்றால் சரிதான். விவசாயம் செய்யும் காலங்களில் மேற்படி பாதைகளை அழித்துவிடுவார்கள் என்றால் சரிதான். தாவாச்சொத்து மீனாட்சிபுரம் கிராம மெயின்ரோட்டிலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும். விவசாய காலங்களில் இரண்டு காடுகளின் பொழிகளில் சென்று விவசாயம் செய்து வருவார்கள். இரண்டு காடுகளிலும் உள்ள பொழிகளில் தடம்போட்டு விவசாயம் செய்து வந்தார்கள். மீனாட்சிபுரம் கிராம மெயின்ரோட்டிலிருந்து வாதி வழக்கு செய்திருக்கும் சொத்துவரை எப்போதுமே வண்டிப்பாதை கிடையாது என்றால் கிராம கணக்கில் வண்டிப்பாதை என உள்ளது ஆனால் போக்குவரத்து இல்லை என சாட்சி கூறுகிறார். எதனால் போக்குவரத்து இல்லை என்றால் ஆள்நடமாட்டம் இல்லாத காரணத்தினால் போக்குவரத்து இல்லை என சாட்சி கூறுகிறார். அந்தந்த இடத்துக்காரர்கள் அவர்களது இடத்தை உழுதுவிடுவார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற கேள்வியாக மேற்படி பாதை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று கேட்டதற்கு சர்வே எண். 331/3ல் உள்ளது என சாட்சி கூறுகிறார்.

(2) வருவாய் ஆவணத்தில் பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளது

ஆனால் பூமியில் அவரவர் இடத்தை உழுதுவிடுவார்கள் என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள இடத்திற்கு வடக்கே யாருடைய இடம் உள்ளது என எனக்குத் தெரியாது. சர்வேபாதை இல்லாத இடங்களில் விவசாயிகள் வரப்பு வழியாகச்சென்று விவசாயம் செய்து வருவார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.331/1 "அ" பதிவேட்டில் முத்துக்கிருஷ்ணன் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.326/1 சாகுபடி அடங்கல் கணக்கில் சின்னகுருசாமி 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது பருத்தி விவசாயம் செய்யப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிட்டாவில் பட்டா எண்.875ல் போடுசுப்பன்செட்டியார் மக்கள் பாலகிருஷ்ணன், முத்துகிருஷ்ணன் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.331/1புலவரைபடத்தில் தெற்கு மாலில் வண்டிப்பாதை எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல காண்பிக்கப்பட்டுள்ளது என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.331/1ற்கும், சர்வே எண்.331/5ற்கும் இடையே வண்டிப்பாதை செல்கிறது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S